**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 171/2012**
**Prosecution Witness P.W. 11**
.....

Name : திரு. பூபாலகிருஷ்ணன் Calling :

Father's name : திரு. சுப்புராம் Religion :

Village : Age :

Taluk :

நாள் - **27.06.2025**

**(எதிரிகள் ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.07.2010 ம் தேதி டிஎன் 58 என் 1129 என்ற பதிவெண் கொண்ட மதுரையில் இருந்து நாட்டாபட்டி செல்லும் 55F எண்ணுள்ள பேருந்தில் நாட்டாபட்டியில் இருந்து காலை 8.50 மணிக்கு டிரிப் எடுத்து மதுரைக்கு வந்து கொண்டிருந்தோம். என்னுடன் திரு.அழகர்சாமி என்பவர் நடத்துனராக இருந்தார், அவர் தற்சமயம் ஓய்வு பெற்றுவிட்டார். செக்காணூரணி ரயில்வே கேட் அருகில் பயணிகளுடன் நான் பேருந்தை ஓட்டிக் கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத பத்து பேர்கள் வந்து, முருகன்ஜி என்பவர் மதுரை விமானநிலையத்திற்கு பெயர் மாற்றம் செய்ய கோரி, அதற்காக பந்த் அறிவித்திருந்தார், அதனால் அந்த நபர்கள் சாலையின் அருகில் உள்ள பாதையில் இருந்து கல்லை விட்டு எறிந்து, வண்டியின் முன்பக்க பெரியகண்ணாடி உடைந்துவிட்டது. மேற்படி சேதமதிப்பு குறித்து நிர்வாகத்திற்கு தான் தெரியும். எங்களுக்கும், பயணிகளுக்கும் காயம் எதுவும் இல்லை. சம்பவம் நடந்தது உண்மைதான். அன்று எங்கள் வண்டி சேதம் அடைந்தது போல் மேலும் பல அரசு பேருந்துகள் சேதம் அடைந்திருந்தது, அதுகுறித்து போலிசார் விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். என்னுடைய உயரதிகாரிகள் சேதம் குறித்து பார்வையிட்டார்கள், என்னைவிசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

14.07.2010 அன்று காலை 7.50 மணிக்கு பெரியார் பேருந்துநிலையத்தில்

இருந்து நாட்டாபட்டிக்கு சென்றேன். அங்குசாமி என்ற மேலதிகாரி சொன்னதன் பேரில் நான் கிளம்பினேன். அங்குசாமி என்பவர் புகார் கொடுக்கும் போது தான் வந்தார், அப்போது தான் எங்களுக்கு தகவல் சொன்னார், அதற்கு முன்பு வரவில்லை, தகவல் சொல்லவும் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரம் 9.00 மணி முதல் 9.40 மணிக்குள் இருக்கும். 10.00 மணி போல் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் பேரில் தான் போலிசார் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தனர் என்றால் சரிதான். அடையாளம் தெரியாத நபர்கள் கல்லைவிட்டு எறிந்ததாக தான் போலிஸ்விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கல்லைவிட்டு எறிந்தவர்கள் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தேவர் வாழ்க என்று தான் கல்லை எடுத்து எறிந்தார்கள். மேற்படி கல் எறிந்த நபர்கள் சுமார் 50 அடி தூரத்திற்கு முன்பு இருந்து வந்தார்கள். மேற்படி நபர்கள் கல் எறிந்தவுடன், நான் வண்டியை நிறுத்திவிட்டேன். போலிசார் விசாரணையிலும் கல் எறிந்த நபர்கள் தேவர் வாழ்க என்று சொன்னார்கள் என்ற விபரத்தை கூறியுள்ளேன். ஏழு, எட்டு பேர்கள் கையில் கல் வைத்திருந்தார்கள். எறிந்த கற்கள் பஸ்சின் உள்ளே இருந்தது. போலிசார் விசாரணையிலும் ஏழு, எட்டு பேர்கள் கல் எறிந்தார்கள் என்று சொல்லியுள்ளேன். நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், மேலதிகாரிகள் சொன்னதன் பேரில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.